# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாறில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 118/விசாரணை/E/2022 (SA 4360/E/2021)**

திரு.S.நிரஞ்சன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது ஏற்கனவே இவ்வாணையத்தால் 07.02.2022 அன்று நடத்தப்பட்ட விசாரணையின் தொடர்ச்சியாக 20.08.2025 அன்று மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது :-

*இவ்வாணை கிடைக்கப் பெற்ற 7 தினங்களுக்குள்,* ***மேல்முறையீட்டாளர் இன்றைய*** *விசாரணையின்போது மூன்று முறை கூட்டுப் பட்டா வழங்கியது தொடர்பான தகவலை கோரியுள்ளதால், அப்பட்டாக்களின் நகல்களை ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்திடவும்,*

*இவ்வாணை கிடைக்கப் பெற்ற 60 தினங்களுக்குள், ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள், மேற்குறித்தவாறு மேல்முறையீட்டாளரிடமிருந்து மூன்று கூட்டுப் பட்டாக்களின் நகல்கள் பெறப்பட்டவுடன், அப்பட்டாக்கள் எவ்வாறு வழங்கப்பட்டது என்பது குறித்த தகவலையும்,* வியாசராஜ மடத்திற்கு சொந்தமான புல எண்.1518 எவ்வாறு அரசாங்க நிலமானது *என்பது குறித்தும் உரிய விசாரணை மேற்கொண்டு, உறுதியான தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தில் 05.12.2025 அன்று பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது. தவறும்பட்சத்தில், முன்னாள் மற்றும் இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 19(8)(b)-ன்படி நஷ்டஈடு வழங்கிட பொது அதிகார அமைப்பிற்கு உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என்றும் இவ்வாணையம் அறிவுறுத்துகிறது.*

2. மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்திற்கு 29.11.2025 தேதியிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில், தான் 4 இனங்களுக்கு உரிய சான்றுகளுடன் தகவலை வழங்கக் கோரி 22.09.2025 அன்று பொதுத் தகவல் அலுவலரை கோரியிருந்ததாகவும், இதுவரை தகவல் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேற்குறித்த உத்தரவிற்கிணங்க, ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.மகேந்திரன் 27.01.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியரின் 19.01.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

4. ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் 19.01.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளர் மூன்று முறை கூட்டுப் பட்டா வழங்கியது தொடர்பான நகல்களை இந்நாள் வரை அனுப்பி வைக்கவில்லை என்றும், ஆகவே, பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில், மேல்முறையீட்டாளருக்கு 19.01.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் 24.01.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, மேற்குறித்த கடிதத்தின் நகல் மற்றும் பதிவஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சல் துறையின் ரசீதின் நகல் ஆகியவற்றை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. மேல்முறையீட்டாளரின் இவ்வாணையத்திற்கு 29.11.2025 தேதியட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள 22.09.2025 தேதியிட்ட கடிதம் குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேற்குறித்த கடிதத்தில், ஆணையத்தின் உத்தரவுப்படி மூன்று முறை கூட்டுப் பட்டா வழங்கியது தொடர்பான விபரங்களை இணைத்து அனுப்பவில்லை என்றும் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

6. இவ்வாணையத்தின் உத்தரவின் அடிப்படையில், தற்போது ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் மூன்று முறை பட்டா வழங்கியதற்கான அதன் நகல்களை தாக்கல் செய்யும்பட்சத்தில், அம்மனுக்கள் வழங்கப்பட்டது குறித்து விசாரணை மேற்கொண்டு அது குறித்த தகவலை வழங்கிட ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியருக்கு உத்தரவிட்டு, இவ்வழக்கினை முற்றாக்கம் செய்கிறது.

**ஆணை நாள் : 06.04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 118/விசாரணை/E/2022 (SA 4360/E/2021)</u>**

பெறுநர்
வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்-620 027.

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்-620 027..

திரு.S.நிரஞ்சன்
15 வாருதி நகர்
ராகவேந்திரபுரம்,
ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்-620 006.

Copy to: File

RJ/PS 7.4